28.07.2025

O.S.No.376/2014

பி.வா.சா.1.திரு.மகாமணி த.பெ.லேட் கம்பக்குடி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாதை வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி தன் வீட்டிற்கு செல்லும் பாதையில் ஒரு பகுதியை ஆக்கிரமித்து ஓட்டுசாய்வு இறக்கியுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாதையே இல்லை. தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையானது சேகர் வீட்டிற்கு செல்லும் பாதை கிடையாது. பின்பக்கம் பாதை உள்ளது.

2. எனது நிருபண வாக்குமூலத்தில் நான் பாதையை மறித்து எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், அந்த பாதையில் இருசக்கர வாகனங்கள் சென்று வருகிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் நிருபண வாக்குமூலத்தில் பத்தி 9 ல் பிராது பக்கம் 4 பாராவில் சொல்லப்படும் ABCD பகுதியை தவிர வாதி சென்று வருவதற்கு பாதை இல்லை என்று சொல்வது தவறானா தகவல்களாகும். இப்பொழுதுகூட வாதி தனது நான்கு சக்கர வாகனத்தில் தாராளமாக சென்று வருகிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சம்மந்தமாக நானே வாதி அந்த பாதையை பயன்படுத்துகிறார் என்பதை ஒப்புக் கொள்கிறேன் என்றால் இல்லை. வாதியின் வீட்டிற்கு மேற்கு பகுதியில் பாதை உள்ளது.

3. என் வீட்டிற்கு முன் பகுதியில் பாதை உள்ளது. என் வீட்டிற்கு பின்னால் வாதி சேகர் வீடு உள்ளது. அந்த வழியாக தான் வாதி சேகர் வீட்டிற்கும் செல்ல வேண்டுமென்றால், வாதிக்கு பின் பகுதியில் பாதை

உள்ளது. நான் நடந்து செல்லக்கூடும் பாதைக்கு 2C பட்டா உள்ளது. 2C பட்டா உள்ளது என்று சொல்லுபட்சத்தில் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பாதைக்கு எனக்கு 2C பட்டா வழங்கப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் வீட்டிற்கு பின்னால் வாதியின் வீடு உள்ளது என்பதால் நான் பயன்படுத்தும் அதே பாதையை வாதி பயன்படுத்தி வந்தார் என்றாலும், அந்த பாதையை தான் வாதி பயன்படுத்த வேண்டும் என்றாலும் நான் அந்த பாதையை ஆக்கிரப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு மேற்கு பக்கம் பாதை உள்ளது.

4. பாதையை நான் ஆக்கிரமித்து உள்ளேனா, இல்லையா என்று நீதிமன்றத்தில் இருந்து ஆணையரை நியமித்து பார்வையிட்டால் ஆக்கிரமிப்பு உள்ளதா என்று தெரிவரும் என்றால் அங்கு ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை. என் அப்பா காலத்தில் இருந்தே தற்போது எப்படி உள்ளதோ அவ்வாறே உள்ளது. என் அப்பா காலத்தில் இருந்தே ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றாலும், வாதி செல்வதற்கு அந்த பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றாலும், வாதி மாற்றுதிறனாளி என்பதால் வாகனங்கள் மூலம் தான் செல்லமுடியும் என்றாலும், அவர் வாகனம் செல்லுவதற்கான பாதையை ஆக்கிரமித்து ஓட்டு செட்டு ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும், அதை நான் அப்புறப்படுத்த வேண்டும் என்றாலும் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**(3, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.P.மகாராஜன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.